## வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனி – 2017

வரையறுக்கப்பட்ட மில்கோ (தனியார்) கம்பனியின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனக் கருதும் மீளாய்வாண்டினது கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புரைகள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான பணிப்பாளர் சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு தேவையான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானிப்பது பணிப்பாளர் சபையினது பொறுப்பாகும்.

### 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையினது 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம், நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் ஆண்டறிக்கையின் வரைவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஆண்டறிக்கையின் வரைவு என்பன 2018 ஒக்டோபர் 25 ஆந் திகதியளவிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 சொத்துக்களதும் பொறுப்புகளதும் நிலைமை

கம்பனி இறுதியாகத் தயாரித்த 2016 டிசெம்பர் 31 இல் உளள்வாறான நிதிக்கூற்றுக்களில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புகள், உரித்துகளது விபரம் வருமாறு.

| சொத்துக்கள் | 2016/12/31 | 2015/12/31 |
|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 14,764 | 12,262 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 2,634 | 1,785 |
| மொத்தச் சொத்துக்கள் | 17,398 | 14,047 |
| **பொறுப்புக்கள்** | | |
| உரித்துகள் | 2,349 | 1,941 |
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 14,086 | 10,078 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 963 | 2,028 |
| மொத்தப் பொறுப்புகள் | 17,398 | 14,047 |

| | | |
|---|---|---|
| | ===== | ===== |
| வருமானம் | 9,006 | 8,011 |
| செலவினம் | 8,679 | 8,023 |
| மிகை / பற்றாக்குறை | ----------- | ----------- |
| | 327 | (12) |
| | ===== | ===== |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2017 யூன் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவச் சுற்றறிக்கையின் பிரகாரம், கம்பனியின் சகல நிலையான சொத்துக்கள் தொடர்பான அறிக்கைகளும் கொம்ப்ட்ரோலர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டுமாயினும், 2018 ஒக்டோபர் 29 ஆந் திகதியளவிலும் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம் மற்றும் படல்கம செயற்திட்டம் என்பவற்றிற்குப் பெறப்பட்ட கடனின் விளைவாக கம்பனியின் திரவவியல் விகிதம் 2012 முதல் 2016 வரை 0.64 முதல் 5.99 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவின் பிரகாரம், தற்போது கம்பனியிடமுள்ள தொழில்நுட்ப அறிவு, வர்த்தகச் சந்தை, வழங்குநர், ஸ்தாபன வியூகம், திட்டமிட்ட கால வரம்புக்குள் நிறைவேற்றப்படக்கூடிய இலக்குகள் மற்றும் நோக்குகள் சம்பந்தமாக முகாமைத்துவப் பொறுப்பை வெளிப்படுத்தும் செயல் நடவடிக்கைத் திட்டம், 2015 - 2017 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினது வருடாந்தப் பாதீட்டில் முலதனச் செலவினம் மாத்திரமே உள்ளடக்கப்பட்டு செயற்பாட்டுச் செலவினம் உள்ளடக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது கம்பனியானது மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் மூலதனச் சொத்துக்களைப் பழுதுபார்த்தல் என்பவற்றிற்கு முறையே ரூபா 660.42 மில்லியன் மற்றும் ரூபா 207.95 மில்லியன் எனப் பாதீட்டில் நிதியேற்பாடு செய்திருந்தபோதும், 2006 அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டலின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம் பிரதான பொருட் கொள்வனவுத் திட்டத்தைத் தயாரிக்கவில்லை.

### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

---

கம்பனியினது பால் உற்பத்தி முன்னேற்றத்தைப் பரிசீலிக்கையில், 2015 ஆம் ஆண்டுக்கு ஒப்பாக 2016 ஆம் ஆண்டில் கிருமி நீக்கிய பால் உற்பத்தி 47 சதவீதத்தால் அதிகரித்தபோதும், 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 36 சதவீத குறைவு ஏற்பட்டிருந்தது. மேலும், சீஸ் உற்பத்தி 2016 ஆம் ஆண்டில் 59 சதவீதத்தாலும் மீளாய்வாண்டில் 29 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 29 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் பட்டரின் உற்பத்தி 32 சதவீதத்தாலும் பால்மாவின் உற்பத்தி 69 சதவீதத்தாலும் தொடர் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

### 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

---

கையிருப்புக் கணிப்பு மேற்பார்வை சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) அம்பேவெல தொழிற்சாலை

---

அம்பேவெல தொழிற்சாலையில் 2017 டிசெம்பர் 26 முதல் 30 வரை மேற்கொண்ட கையிருப்புக் கணிப்பு மேற்பார்வையின்போது நலிவான களஞ்சிய நிர்வாகம் நிலவியமை அவதானிக்கப்பட்டது. மேலும், ரூபா 13 மில்லியன் பால் மா கையிருப்பு பாதிப்படைந்துள்ளமை அவதானிக்கப்பட்டதுடன், அது தொடர்பான விபரம் பின்வருமாறு.

(i) பால்மா, பிரதானமாக இரு களஞ்சியங்களில் அடைக்கப்பட்டிருந்தன. அதில் பிரதான களஞ்சியத்தின் கூரையில் உள்ள துவாரத்தினூடாக மழைநீர் கசிந்து ஏறக்குறைய 3 அங்குல உயரத்திற்கு நீர் நிரம்பியிருந்தது. மேலும், 25 கிலோகிராம் வீதம் அடைக்கப்பட்டுள்ள 178 பால்மா பெக்கட்கள், அதாவது, ரூபா 3 மில்லியன் பெறுமதியான 4,450 கிலோகிராம் பால்மா சிதைவடைந்து பால்மா வெளியேறியிருந்தன. மழையில் நனைதல், பைகளில் வெடிப்பு ஏற்படுதல், நெருக்கமேற்பட்டு பழுதடைதல் போன்ற பல்வேறு இழப்புகள் ஏற்பட்டிருந்தன.

(ii) களஞ்சியத்தின் பால்மா கையிருப்பு கிரமமாக, அதாவது, குறியீட்டு எண்ணின் பிரகாரம், பொருள் இலக்கத்தின் பிரகாரம், காலாவதியாகும் நாளின் பிரகாரம் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தப்படாதிருந்தன. மேலும், கையிருப்பை வழங்குகையில் களஞ்சியத்தில் முதலில் வருபவற்றை முதலில் வழங்காததுடன், கையிருப்பை இலகுவாக அடைய முடியாதவாறு களஞ்சியப்படுத்தியிருந்தமையும் அதற்குக் காரணமாகியது. 2018 பெப்ரவரி 01 ஆந் திகதியளவில் காலாவதியாகும் தினத்தை அண்மித்திருந்த ரூபா 2.6 மில்லியன் விற்பனைப் பெறுமதியுடைய 3,900 கிலோகிராம் பால்மா மற்றும் காலாவதியாகி விலங்கின உணவாக வகைப்படுத்தப்பட்டிருந்த 10,750 கிலோ கிராம் பால்மா இருந்ததுடன், அவற்றின் விற்பனைப் பெறுமதி ரூபா 7.4 மில்லியன் ஆகவுமிருந்தது.

(ஆ) பொலனறுவை தொழிற்சாலை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) டீசல் கையிருப்பை நேரடியாகச் சரி, பிழை பார்க்காது அறிக்கைகளில் உள்ளடக்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ii) 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான இரசாயானக் கையிருப்பின் பெறுமதி ரூபா 174,420 ஆக மதிப்பிடப்பட்டிருந்தபோதும், 2007 முதல் 2017 வரையான காலப்பகுதியின்போது காலாவதியாகிய மற்றும் தற்போது பயன்படுத்தப்படாத 26 வகை இரசாயனப் பொருட்கள் அதில் உள்ளடங்கியிருந்ததுடன், அநேக இரசாயனப் பொருட்களது உற்பத்தித் தினம் மற்றும் காலாவதியாகும் தினம் என்பன குறிப்பிடப்படாதிருந்தன. மேலும், பயன்படுத்த முடியாதுள்ள ரூபா 3,164,057 பெறுமதியான 5 வகை பொதியிலடைத்தப் பொருட்களும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கையிருப்பில் உள்ளடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், கையிருப்பைப் பெறுமதியிடும் அறிக்கைகள் இவ்வறிக்கைத் தினம் வரை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பால் சேகரிக்கப்படும்போது தொழிற்சாலையில் பெறப்படும் பாலின் அளவுக்கும் அதிகமாகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதால் மில்கோ நிறுவனம் 2017 ஆம் ஆண்டில் ரூபா 73,343,796 கூடுதலாகக் கொடுப்பனவு செய்திருந்தது. பால் சேகரிப்பு நிலையம் முறையான மேற்பார்வையின்றி இயங்குவதும் தலைமை அலுவலகத்திற்குத் தரவுகளை வழங்கி தன்னிச்சையாக மேற்பார்வை செய்வதற்கு இயலுமானவாறு தொழிற்சாலையை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் புதிய பால் சேகரிப்பு நிலையங்களை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் புதிய பால் சேகரிப்பு நிலையங்களை நிறுவாததுமே இந்நிலைமைக்கான பிரதான காரணமாகும்.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம், அம்பேவெல தொழிற்சாலையில் ரூபா 124,587,211 பெறுமதியான 1,813,226 லீட்டர் பாலினது அசாதாரன கையிருப்பு இழப்பு மற்றும் 2017 யூலை வரை 2 சதவீதமான சாதாரண தள்ளுபடி, மீளாய்வாண்டின் ஆகஸ்ட் தொடக்கம் 4 சதவீதம் வரை அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

## 4.4 பதவியணி நிர்வாகம்

முகாமைத்துவச் சேவையின் 30 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், பதவியணியினரது ஆட்சேர்ப்புக்கான நடைமுறைகளைத் தயாரித்து 2018 ஒக்டோபர் 25 வரை அங்கீகரிக்கப்படாதிருந்தது. மேலும், 2008 நவெம்பர் 07 ஆந் திகதி முகாமைத்துவச் சேவைகள் திணைக்களம் அங்கீகரித்திருந்த பதவியணி 1420 ஆகும். உள்ளவாறாக பதவியணி 1,471 ஆகும். வெற்றிடங்களின் எண்ணிக்கை 51 ஆகும்.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

### 5.1 நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கத்தை அடைதல்

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 2030 ஆண்டளவில் தனது ஸ்தாபனத்திற்குரிய சகல நாடுகளினதும் பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமுதாய அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றை வழங்குதலை அடிப்படையாகக் கொண்டு நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலை அறிமுகஞ் செய்திருந்தபோதும், அதற்குப் பொருத்தமானவாறு கம்பனி இலக்கையும் சுட்டுக்களையும் இனங்கண்டிருக்காததுடன், சரியான தரவுகளைப் பெறுதல் மற்றும் பௌதீக வள முகாமைத்துவமிடும் விதிமுறைகள் என்பன இனங்காணப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவு

#### (அ) தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வெளிநாட்டு நிறுவனமான டெஸ்மி நிறுவனம் நிதி, திட்டமிடல் அமைச்சுடன் தொடர்புபடுத்திய 4 தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல், 80 பால் சேகரிப்பு நிலையங்களைப் பழுதுபார்த்தல் மற்றும் 20 புதிய நிலையங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பான முன்மொழிதல்கள் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழுவால் பகுப்பாய்வு செய்யப்பட்டது. அதற்கமைய சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் 2009 டிசெம்பர் 31 ஆந் திகதி 39.1 மில்லியன் யூரோவுக்கு கம்பனியும் மேற்படி நிறுவனமும் ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. எனினும், 2011 யூன் 24 ஆந் திகதியன்று கம்பனியின் தலைவர் அந்த நிறுவனத்திற்கு அனுப்பிய கடிதத்தின் மூலம் 2.37 மில்லியன் யூரோ ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 80 பால் சேகரிப்பு நிலையங்களை பழுதுபார்த்தல் மற்றும் 20 நிலையங்களை நிர்மாணிக்கும் பணிகள் என்பவற்றை நீக்கப்பட்டு புதிய முன்மொழிதல் ஒன்று ரூபா 33.78 மில்லியனுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2012 சனவரி 12 ஆந் திகதி மீண்டும் உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்பட்டது. எனினும், தொழில்நுட்பப் பகுப்பாய்வுக் குழு முதலில் இயந்திர ஆற்றல் அதிகளவு உள்ளதாகக் கற்பனை செய்தே செயற்திட்டத்தை மதிப்பாய்வு செய்திருந்தமையால், பால் சேகரிப்பு நிலையப் பழுதுபார்த்தல் மற்றும் புதிய நிலையங்களை நிர்மாணிக்க வேண்டுமாயினும், புதிய ஒப்பந்த உடன்படிக்கையின் மூலம் அப்பணிகள் நீக்கப்பட்டும் மாற்றீடு சமர்ப்பிக்கப்படாதும் போனமையால் செயற்திட்டத்தின் பயன் தொடர்பாக சாதகமற்ற விளைவுகள் ஏற்படலாம் எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ii) பொலன்னறுவை, திகன, அம்பேவெல ஆகிய தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தலுக்கான ரூபா 5,854,450,856 (33,779,210 யூரோ) கடன் தொடர்பாக கேள்வி கோரப்படாது டேர்ன் கீ (Turn key) முறையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு ஒப்பந்த நிறுவனம் மற்றும் மில்கோ பிரத்தியேக கம்பனி என்பவற்றுக்கிடையே உடன்படிக்கை ஏற்பட்டிருந்தது.

அதற்கமைய செயற்திட்டத்தின் ஒப்பந்தக் காலம் 2014 யூலை 12 ஆந் திகதி முடிவடையவிருந்தது. எனினும், திகன மற்றும் அம்பேவெல பால் தொழிற்சாலைகளை நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் 2017 யூலை 31 வரை முடிவடையவிருந்ததுடன், ஒப்பந்தக் காலத்தை நீடிப்பதற்கு அல்லது இணக்கத்திற்குள்ளான தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு கம்பனி நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை. எவ்வாறாயினும், 2017 யூலை மாதமளவில் உடன்படிக்கைப் பிரகாரம் 36 மாதகால தாமதத்திற்கும் 1,688,961 யூரோ அறவிடப்பட வேண்டியிருந்தது.

(iii) மேற்படி தொழிற்சாலையினது நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்கு 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த நடவடிக்கைகளுக்கேற்ப, 2013 ஆம் ஆண்டில் எச்எஸ்பீசீ வங்கிக்கும் திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் இடையேயும் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் கம்பனிக்குமிடையேயான கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் வணிகமயமற்ற 2 சதவீத மற்றும் வணிக மயக் கடன் வட்டியாகிய 6+LIBOR அடிப்படையில் வணிக ரீதியான கடனுக்கும் இணக்கம் செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் கம்பனிக்குமிடையே அவ்வட்டி வீதத்திலேயே உப கடன் உடன்படிக்கை ஏற்பட்டுமிருந்தது. அக்கடனின் பொருட்டு 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனி திறைசேரிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய நிலுவையானது, மூலக் கடனின் பிரகாரம், ரூபா 3,554,761,168 ஆகும். குறித்த உடன்படிக்கைப் பிரகாரம் கம்பனி பணத்தைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திராமை அவதானிக்கப்பட்டது.

**(ஆ) படல்கம செயற்திட்டம்**

-------------------------------------------------------------------

எஸ்எல்பீசீ வங்கிக்கும் திறைசேரியின் வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கும் இடையேயான உடன்படிக்கைப் பிரகாரம், வணிகமயமற்ற 1.90 சதவீதம் மற்றும் 5+LIBOR வணிகக் கடன் வட்டியினடிப்படையில் உடன்படிக்கைக்குள்ளான ரூபா 9,932,709,286 கடனின் கீழ் கம்பனிக்குச் சொந்தமான நாரஹேன்பிட்ட தொழிற்சாலையை படல்கமைக்கு கொண்டு செல்லும் செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 மார்ச் 04 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் பின்வரும் விடயங்களின் காரணமாக செயற்திட்டத்தை நிராகரிப்பதற்கு 2015 மார்ச் 07 ஆந் திகதி அமைச்சரவை தீர்மானித்திருந்தது. எனினும், 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி குறித்த கடனின் பொருட்டு 3 ஆண்டுகால சலுகை அடிப்படையில் மில்கோ கம்பனிக்கு மீள்கடன் வழங்கும் அடிப்படையில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம், 2015 ஏப்ரல் 23 ஆந் திகதி செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. எனினும், 2018 ஒக்டோபர் 19 வரை கம்பனியும் திறைசேரியும் மீள்கடன் உடன்படிக்கையில் ஈடுபட்டிருக்கவில்லை.

- கடனைத் திருப்பிச் செலுத்தும் ஆற்றல் மில்கோ கம்பனிக்கு இல்லாமை.
- அரசாங்கத்தின் கொள்கைப் பிரகாரம், பாலின் விலையை அதிகரித்தும் அதற்கொப்பாக பால் உற்பத்தி விலையை அதிகரிப்பதன் மூலம் காசுப்பாய்ச்சலில் குறைவு ஏற்படுவதால் கம்பனி மிகுந்த நிதி நெருக்கடிக்குள்ளாவதாகவும் மேலும் கடனைப் பெறுவதால் அந்நிலைமை மேலும் தீவிரமடையலாம் என்பதும்,

- உத்தேசிக்கப்பட்ட தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் மூலம் உற்பத்திக்காக நாளொன்றிற்கு ஏறக்குறைய 200,000 லீட்டர் பால் தேவை எனவும், அதற்கமைய கம்பனி ஏறக்குறைய 600,000 லீட்டர் பாலைப் பெற வேண்டுவதுடன், அது நாட்டின் உற்பத்தியில் ஏறக்குறைய 75 சதவீதம் எனவும், தொழிற்சாலை அமைக்கப்பட்டால் பாலை வழங்குவதில் பெரும் நெருக்கடிக்குள்ளாகலாம் எனவும்.

(ii) 2013 யூன் 05 ஆந் திகதிய அமைச்சின் மதிப்பாய்வுக் குழுவினால் டெஸ்மி கொண்டிரெக்டிஸ் ஏஜன்சீஸ் மற்றும் பொக்கார்ட் புட் பர்மா நிறுவனம் என்பன மதிப்பாய்வு செய்யப்பட்டு பொக்கார்ட் புட் பர்மா நிறுவனம் மிக சாதகமான நிறுவனம் என சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எனினும், 2015 ஏப்ரல் 23 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், செயற்திட்டத்திற்கு Standalone மற்றும் Unsolicited முன்மொழிதலாக குறிப்பிடப்பட்டு கேள்விகள் ஒப்பந்தத்தை (Turn Key) அடிப்படையில் டெஸ்மி கொண்டிரெக்டிங் ஏஜன்சிக்கு ஒப்பந்தத்தை வழங்குவதற்கெனத் தீர்மானிக்கப்பட்டு 2015 மே 19 ஆந் திகதி கம்பனியுடன் ஒப்பந்த உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- 2013 யூன் 05 ஆந் திகதிய அமைச்சின மதிப்பாய்வுக் குழுவினது முன்மொழிதலின் பிரகாரம், டெஸ்மி கொண்டிரெக்டிஸ் ஏஜன்சீஸ் நிறுவனத்தின் விலை பொக்கார்ட் புட் பர்மா நிறுவனத்தை விட 10 மில்லியன் யூரோ (ரூபா 1,750 மில்லியன்) அதிகமாகவிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.
- மேற்படி செயற்திட்டம் சம்பந்தமாக 2014 ஆகஸ்ட் 20 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட குழுவினது அறிக்கைப் பிரகாரம், டெஸ்மி கொண்டிரக்டில் ஏஜன்சீஸ் கம்பனி மேற்கொள்ளவிருந்த நிர்மாண வேலைகளது பெறுமதி ஏறக்குறைய ரூபா4,000,000 யூரோ (ரூபா 596,952,800) நியாயமான பெறுமதியிலும் பார்க்கக் கூடிய பெறுமதியைக் காட்டுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், மில்கோ நிறுவனத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் நாளாந்தம் 650,000 லீட்டர் பால் உற்பத்தி மதிப்பீடு செய்யப்பட்டபோதும், இலங்கையின் நாளாந்த பாலின் அளவு 1,085,473 லீட்டர் பால் மாத்திரமே. ஆகையால், அதற்கமைய கம்பனியின் பால் சேகரிப்பு 50 சதவீத வரம்பை அதிகரிக்க வேண்டியதுடன் அது வரம்பிற்குட்பட்ட சாதனமாகும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) தேவையைச் சரிவர இனங்காணாதும் பொருட் கொள்வனவு நடைமுறைகளிலிருந்து விலகியவாறும் தெரிவு செய்யப்பட்ட வழங்குர் ஒருவரிடமிருந்து கொழும்பிலுள்ள தொழிற்சாலைக்கு யோகட் வேலை இயந்திரம் ஒன்று 2011 சனவரி 20 ஆந் திகதி வாடகைக் கொள்வனவு அடிப்படையில் ரூபா 104.17 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. 2017 யூலை வரை அது பயன்படுத்தக் கூடியவாறான நிலமையில் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வவ்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டுத் துறை | | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) | அரசாங்கத்தின் எதிர்பார்த்த நோக்கம் மற்றும் இலக்குகளுடன் இணைந்தவாறு கூட்டிணைந்த திட்டம், செயல் நடவடிக்கைத் திட்டம், பாதீடு, செயலாற்றல் அறிக்கைகள் என்பன தயாரிக்கப்படவில்லை. |
| | (ii) | பால் சேகரிக்கப்படும் நிலையங்கள் முறையாக மேற்பார்வை செய்யப்படாமை, போதுமானளவு பால் சேகரிப்பு நிலையங்களை நிர்மாணிக்காது போனமை ஆகிய காரணங்களால் பயன்படுத்துவதற்குப் பெறப்படும் பால் விரயமாக இடமளித்தல். |
| (ஆ) கையிருப்புக் கட்டுப்பாடு | | கையிருப்பைக் கிரமமாக களஞ்சியப்படுத்தமையால் அவை அழிவடைதல், காலாவதியாகுதல் கையிருப்பு கணிப்பு முறையாக நடைபெறாமை என்பன. |